# பெட்டாலிங் கம்போங் பாசீரில் காரின் மீது தெரு நாய்கள்:

# அச்சத்தில் கார் உரிமையாளர்கள்!

(நமது நிருபர்)

கோலாலம்பூர், ஆக.18-
பெட்டாலிங், கம்போங் பாசீரில் காரின் மீது தெரு நாய்கள் இருப்பதைக் கண்டு கார்களின் உரிமையாளர்கள் அச்சம் கொண்டுள்ளனர்.

இவற்றைப் பிடித்துச் செல்வதில் கோலாலம்பூர் மாநகர் மன்றம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது.

இந்த நாய்கள் காருக்கு அடியில் படுத்திருந்தாலும் பரவாயில்லை, மாறாக காரின் மேல் படுத்திருப்பதால் அதில் கீறல்கள் விழுந்து கார் சேதமடைந்து விடுகிறது. இதனால் வேலை முடிந்து வீடு திரும்பும் போது உரிமையாளர்கள் காரை எடுக்க அச்சம் கொள்கின்றனர்.

கார் நிறுத்துமிடத்தில் இந்த மாதிரியான நாய்கள் இருப்பது ஒருபுறம் கார்களின் பாதுகாப்பிற்கு நல்லதாகக் கருதப்பட்டாலும் காரின் உரிமையாளர்களுக்கு அச்சம் ஏற்படுத்தும் வகையில் இருந்தால் நாளடைவில் வாகன நிறுத்துமிடம் எங்கும் இதுபோன்ற தெரு நாய்களின் எண்ணிக்கை அதிகரித்துப் பொதுமக்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமைந்து விடும்.

ஆகையால் இதற்கு மாநகர் மன்றம் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்வதோடு தலைநகர் முழுவதும் உள்ள இதுபோன்ற நாய்களைப் பிடித்து மக்களின் பாதுகாப்பிற்கு வழி வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது.

